மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியம்மாள் | நாள் | 03.10.2024 |
| கணவர் பெயர் | பாலகிருஷ்ணன் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) இவ்வழக்கை யார் என் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால், வரதராஜி என்பவர் எங்கள் மீது தாக்கல் செய்துள்ளார். யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால், என் மீதும், கோகிலா, ஆராயி ஆகியோர்கள் மீதும் தாக்கல் செய்துள்ளார். எனக்கு என்ன வயதாகிறது என்றால், சரியாக தெரியவில்லை. சுமார் 60 வயது இருக்கும். தற்போது நான் யார் யாருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், எனக்காகவும், ஆராயி மற்றும் கோகிலா ஆகியோருக்காகவும் தற்போது சாட்சியம் அளிக்கிறேன்.

2) எனக்க எழுத, படிக்க தெரியுமா என்றால், தெரியாது. என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு 53 வயது என சொல்லியிருந்தால், அது தவறானது என்றால், சரிதான். எந்தெந்த சொத்துக்களுக்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், எங்களது பாட்டனார் சொத்துகளுக்காக போட்டுள்ளார். அதன் சர்வே எண்கள், பட்டா எண்கள், சக்குபந்தி ஆகியவை எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால், தற்போது 3.10 ஏக்கர் நிலத்திற்கு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியும்.

3) என் கணவர் பெயர் பாலசுப்ரமணி என்றால், சரிதான். அவரை பாலகிருஷ்ணன் எனவும் சொல்வார்கள் என்றால், சரிதான். 3 ம் பிரதிவாதி பெரியண்ணன் என்பவர் யார் என்றால், என் அண்ணன் மகன் ஆவார். 4 ம் பிரதிவாதி அறிவழகன் என்பவர் யார் என்றால், என் அண்ணன் அங்கமுத்துவின் மகன் ஆவார். வாதி வரதராஜி என்பவர் யாரிடமிருந்து சொத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால், எங்களுக்கு தெரியாமல் என் தந்தையிடமிருந்தும், என் சகோதரர்களிடமிருந்தும் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி சொத்தை சுமார் 34 வருடங்களுக்கு முன்பு கிரயம் பெற்று, தற்போது வரை அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான். ஆனால், நாங்கள் கேட்கும் பொழுது

போகித்துக்கு ஓட்டி வருவதாக சொல்லி வந்தார்கள். ஆனால் அவர்கள் கிரயம் பெற்ற விவரம் எங்களுக்கு தெரியாது.

4) மேற்படி 1ம் வாதி பெயரில் மேற்படி கிரய சொத்துக்களை பொறுத்து, பட்டா உள்ளது என்றால், அது பொய் பட்டா ஆகும். மேற்படி 1ம் வாதி வரதராஜி சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி 1ம் வாதி வரதராஜிவின் வாரிசுகள் தான் 2 முதல் 5 வரையிலான வாதிகள் என்றால், சரிதான். மேற்படி 2 முதல் 5 வரையிலான வாதிகள் தற்போது எங்கு வசிக்கிறார்கள் என்றால், அவர்களது நிலத்தில் குடியிருக்கிறார்கள். அவர்களும் மேற்படி தாவா சொத்திற்கு வந்து செல்வார்கள். நாங்களும் தாவா சொத்திற்கு சென்று வருவோம். மேற்படி வாதிகளின் சொத்து தாவா சொத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால், சுமார் 150 அடி இருக்கும். (வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.